சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

# Case No. OS. 139/2021

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | தொழில் | பட்டு வேலை |
| தந்தை பெயர் | பார்த்தசாரதி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**12.09.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 28.06.2018 தேதியிட்ட ரூ.6,25,000/-த்திற்கான அசல் கடனுறுதிச்சீட்டு **வா.சா.ஆ.1**.(பிரதிவாதி தரப்பு ஆட்சேபனை யுடன் குறியீடு செய்யப்படுகிறது) 08.03.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3**, 14.06.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.4,** 14.06.2017 தேதியிட்ட 2ம் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.5,** 14.06.2017 தேதியிட்ட 3ம் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.6**, 14.06.2017 தேதியிட்ட 4ம் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.7,** 14.06.2017 தேதியிட்ட 5ம் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.8,** அஞ்சலக ஒப்புகை அட்டைகள் **வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.13 வரை** ஆகும். தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.